**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.49/2025 - PW-7**

| | |
|---|---|
| Name | திரு.கருணாகரன் |
| Husband/Father Name | ஜெயராமன் |
| Village /Area | வெங்கடாபுரம் |
| Taluk | பள்ளிபட்டு |
| Occupation | த.அ.போ. ஓட்டுநர் பயிற்சி ஆசிரியர் |
| Age | 58 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.03.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 16.01.2025 மாட்டு பொங்கல் அன்று பேருந்து எண் TN 23 N 2371 தடம் எண் 11/A என்ற பேருந்து கீரைசாத்து என்ற கிராமத்தில் வண்டி நின்று கொண்டிருந்த போது 8 நபர்கள் போதையில் வந்து அதில் ஒரு நபர் பேருந்தின் முன் பக்க கண்ணாடியை கல்லால் அடித்து உடைத்து விட்டனர். இது சம்மந்தமாக பொன்னை காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டு என்னை விசாரணை செய்ததில் உடைந்த கண்ணாடியின் மதிப்பு ரூ.7500/- ஸ்டிக்கர் மதிப்பு ரூ.1500/- ரப்பர் பீடிங்ஸ் மதிப்பு ரூ.3000/- கூலி ரூ.500/- ஆக மொத்தம் ரூ.12,500/- என்று சான்று வழங்கினேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பேருந்தின் முன் பக்க மதிப்பு சான்று **அ.த.சா.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த சான்று ஆவணத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக பொன்னை காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் த.அ.போ கழக்கத்தில் கடந்த 36 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்த சமயத்தில் நான் டிரைவிங் இன்பெக்டராக பணிபுரிந்து வந்தேன்.

போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் நான் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் என்று கூறினேனா என்றால் இல்லை. டிரைவிங் இன்பெக்டர் என்று தான் கூறினேன்.

சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை ஆனால் சம்பவத்தில் ஈடுப்பட்ட நபர்களை பிடித்து வந்ததை நேரில் பார்த்தேன். ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் பேருந்தில் மட்டும் தான் தங்க முடியுமா அல்லது வேறு எங்காவது தங்கி கொள்ளலாமா என்றால் ஊர் மக்கள் ஒத்துழைப்பு கொடுத்தால் வெளியில் தங்கி கொள்ளலாம்.

அதே வழிதடத்தில் சம்பவத்தில் பாதிப்புக்குள்ளாக்கபட்டதாக கூறப்படும் பேருந்தை யாரோ ஒரு நபர் எடுத்து சென்று விட்டு பிறகு காவல் நிலையம் சென்று தான் பேருந்து திரும்ப பெற்றது என்ற விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை.

பேருந்தின் கண்ணாடி உடைக்கபட்ட விவரம் பற்றி அந்த பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் எப்போது எனக்கு தகவல் கொடுத்தார்கள் என்றால் 10 நிமிடத்திற்குள் தகவல் கொடுத்தாரகள்.

என்னால் வழங்கபட்ட மதிப்பு சான்றிதழ் மற்றும் போலீசார் விசாரணையில் 16.01.2025 போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம். மதிப்பு சான்றிதழ் நானாகவே போட்டு கொண்டது என்று சொன்னால் சரியல்ல. மேல் அதிகாரியின் உத்தரவுக்கு இணங்க போடப்பட்டது.

கண்ணாடி மற்றும் இதர பெருட்கள் வாங்கியதற்கான மதிப்பீடு மற்றும் ரசீது தாக்கல் செய்யபட்டுள்ளதா என்றால் அரசாங்கத்தல் மொத்தமாக கொள் முதல் செய்து தேவைபடும்போது பொருட்களை பயன்படுத்தி கொள்வதால் மதிப்பீடு மற்றும் ரசீது தாக்கல் செய்யவில்லை.

மதிப்பீட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்திருந்தால் அது குறைவாக தான் இருந்து இருக்கும். நான் மிகை படுத்தி கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

புகார்தாரர் இந்த வழக்கில் கண்ணாடியை உடைத்தது யார் என்று தனக்கு தெரியாது என்று கூறியுள்ளார் ஆனால் நான் இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

உடைந்த கண்ணாடியுடைய மதிப்பு ரூ.3000/- லிருந்து ரூ.4000/- தான் இருக்கும் என்றும் நான் வழக்கிற்காக மிகை படுத்தி கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிக்கு பாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.05 18:27:20 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.